**MCOP No.34/2019**

**தேதி- 25.03.2026**

**ம.சா.1 : திரு. பிரகாஷ், த/பெ. பாலகிருஷ்ணன்**

**2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

விபத்து சமயத்தில் எனக்கு என்ன வயது என்றால் 31 வயது. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 2019ல் எனக்கு 34 வயது என குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் என்னுடைய பிறந்த நாள் 02.10.1986, அப்படி என்றால் அப்போது எனக்கு 33 வயது. விபத்து நடந்த தேதி 15.06.2018. இரவு சுமார் 9.00 மணி இருக்கும். அந்த நேரத்தில் நான் எங்கள் முதலாளி பாலாஜி என்பவரின் மாமனார் வீட்டிற்குச் சென்று மளிகை சாமான்களை எடுத்து சென்று வைத்து விட்டு பின்பு அவருடைய உறவினர் காரில் திருமணியிலிருந்து ஆரணி நோக்கி வந்துக் கொண்டிருந்தேன். என் முதலாளி ரைஸ் மில் வைத்துள்ளார். நான் அந்த ரைஸ் மில்லில் குமாஸ்தாவாக பணிபுரிந்தேன்.

நான் பயணம் செய்த கார் யாருக்குச் சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் யார் அந்த காரை ஓட்டினார் என்றால் என்னுடைய முதலாளி பாலாஜி என்பவர் தான் ஓட்டி வந்தார். விபத்து சமயத்தில் என் முதலாளி பாலாஜி என்பவருக்கு கார் ஓட்டுவதற்கு உண்டான ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. அவருடைய ஓட்டுநர் உரிமத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

விபத்து சமயத்தில் பாலாஜி என்பவருக்கு நான்கு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்குண்டான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, இருந்தது. அதேபோல் விபத்து சமயத்தில் பாலாஜி என்பவருக்கு பர்மிட்டும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் பாலாஜி என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமமோ பர்மிட்டும் இருந்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறான ஆவணங்கள் ஏதும் இல்லை என்றாலும் சரியல்ல.

ம.சா.ஆ.12ன் படி பாலாஜி என்பவரின் ஓட்டுநர் உரிமத்தில் Vehicle Category என்ற காலத்தில் Non Transport என்று உள்ளது என்றால் சரிதான். Non Transport

என்றால் பர்மிட் இருக்க வேண்டும், ஆனால் விபத்து சமயத்தில் பாலாஜி என்பவருக்கு பர்மிட் இல்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது, நான் மருத்துவமனையில் இருந்தேன்.

முதல் தகவல் அறிக்கையில் ஆரணி - வந்தவாசி சாலையில் ஆகாரம் கிராம ஏரிக்கரை அருகே வரும் போது மழை பெய்துக் கொண்டிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாலையில் திடீரென நாய் குறுக்கே வந்த போது, புன்கண் மரம் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காரில் எத்தனை பேர் பயணம் செய்தோம் என்றால் நானும் பாலாஜி என்பவரும் மட்டும் தான். பாலாஜி என்பவருக்கு ஏதாவது காயம் பட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை.

எனக்கு மாதம் எவ்வளவு சம்பளம் என்றால் ரூ.15,000/-. அதற்கான ஆதாரம் ஏதாவது உள்ளதா என்றால் உள்ளது, ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு மாதம் ரூ.15,000/- சம்பளம் இல்லை என்றாலும் நான் பொய்யாக அவ்வாறு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்தின் போது பாலாஜி என்பவர் காரை இயக்கிய போது குடிபோதையில் இருந்தார் என்பது ம.சா.ஆ.2 காயச்சான்று ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். பாலாஜி என்பவர் குடிபோதையில் பர்மிட் இல்லாமல் விபத்தின் போது காரை இயக்கியதால் அவர் தான் இந்த விபத்திற்கு முழுக்க முழுக்க காரணம் என்றாலும், அதனால் அவர் தான் எனக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல.

விபத்து நடந்த பிறகு நான் எந்த மருத்துவமனைக்குச் சென்றேன் என்றால் முதலில் ஆரணி அரசு மருத்துவமனைக்குச் சென்றேன், அதன் பிறகு வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்குச் சென்றேன். வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரியை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சுஸ்மித்தா பார்மஸி சம்மந்தப்பட்ட பில்கள் அனைத்தும் விபத்திற்கு பிறகு நான் எடுத்துக் கொண்ட சிகிச்சைக்கான பில்கள் என்றால் சரிதான். அங்கு எனக்கு அறுவை சிகிச்சை

செய்தார்கள். எனக்கு அறுவை சிகிச்சை செய்யும் அளவிற்கு பெரிய காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், அனைத்தும் சொற்ப காயங்ள் என்றாலும், நான் நஷ்டஈடு அதிகமாக பெற வேண்டும் என்பதால் நானாகவே சென்று வேலூர் மற்றும் சத்துவாச்சாரி மருத்துவமனைகளில் பில்கள் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மணிசுந்தரம் மெடிக்கல் மிஷன் மருத்துவமனையின் மருத்துவ அதிகாரியை விசாரிக்க போகிறேனா என்றால் விசாரிக்கிறேன். பில்கள் அனைத்தும் உண்மையான பில்கள் இல்லை என்றாலும், விபத்திற்கு பிறகு காலதாமதாக நானாக தயார் செய்து பில்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் சிகிச்சை பெற்றதற்கான பில்கள் தான். இந்த விபத்திற்கு முழுக்க முழுக்க காரணம் என் முதலாளி பாலாஜி என்பவர் குடிபோதையில் பர்மிட் இல்லாமல் காரை இயக்கியது தான் என்பதால், 2வது எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

எனக்கு இடுப்புப் பகுதியில் தான் கொடுங்காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ-14 ஆவணத்தில் எனக்கு 16% ஊனத்தன்மை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு 16% ஊனத்தன்மை என்பது எனக்கு ஏற்பட்ட காயங்களின் படி இல்லை என்றாலும், நான் அதிகமான நஷ்டஈடு கோர அதிகமான சதவிகித ஊனத்தன்மையை கேட்டு வாங்கி வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.